**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

முன்னிலை : திருமதி.A.சரண்யா, M.A., L.L.M., M.Phil.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
குமாரபாளையம்.

2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31–ம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.3/2023 இன் அ.வ.எண்.7/2020**

சுபத்ராதேவி ...மனுதாரர்/2–ம் பிரதிவாதி

/எதிராக/

ராமாயி ...1–ம் எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பு 24.08.2023ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.சிவசுப்ரமணியன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.S.லோகநாதன், அவர்கள் ஆஜராகியும் உள்ளனர். மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பு மனு பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்:**

மனுதாரர்/2–ம் பிரதிவாதி இந்த வழக்கை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 3 விதி 2–ன் கீழ் தாக்கல் செய்து பொது அதிகார முகவர் மூலம் வழக்கு நடத்த அனுமதி கோரியுள்ளார். மனுதாரர் தனது மனுவில்

உடல் நலக்குறைவால், மனுதாரர் படுத்த படுக்கையாக உள்ளதால், இந்த வழக்கில் ஆஜராக இயலாது என்பதால், மனுதாரரின் மகனுக்கு கடந்த 18.12.2019–ம் தேதி பொது அதிகார முகவராக நியமித்துள்ளதால், இந்த வழக்கை மனுதாரரின் மகன் ஆஜராகி நடத்த வேண்டி இந்த மனுவை அனுமதிக்கக் கோரியுள்ளார்.

**2. <u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் பதிலுரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>**

மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து, 1–ம் எதிர்மனுதாரர் தனது பதிலுரையை தாக்கல் செய்துள்ளார். அதில் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜராகிய சாட்சியமளிக்க முடியாத நிலையில் இருந்தால் நீதிமன்ற ஆணையர் மூலமாக சாட்சியத்தை பதிவு செய்ய முடியும். வழக்கின் விசாரணையை தாமதப்படுத்த வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டி 1–ம் எதிர்மனுதார் தனது பதிலுரையில் கோரியுள்ளார்.

**3.** இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காணப்படவேண்டியுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு, பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன.

5.1) வழக்கு கோப்புகளையும், இருதரப்பு வாதுரைகளையும் இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலிக்கிறது. 1–ம் எதிர்மனுதாரர்/வாதி இந்த அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு தற்போது வா.சா.1–ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனுதாரர்/2ம்

பிரதிவாதி இந்த இடைநிலைமனுவை தாக்கல் செய்து தனது மகனை பொது அதிகார முகவராக நியமித்துள்ளதால், மனுதாரருக்காக இந்த வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்த அனுமதி கோரியுள்ளார். இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வு காணவேண்டிய ஒன்றாகும்.

5.2) மனுதாரர் தனது மகனை பொது அதிகார முகவராக நியமித்து கடந்த 18.12.2019 ம் தேதி பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து, அது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது மேற்படி ஆவணத்தை இந்த நீதிமன்றம் பரிசீலித்ததிலிருந்து அறிய முடிகிறது. மனுதாரர் இந்த வழக்கில் ஆஜராகாததற்கு உடல்நல குறைவு என்று மனுவில் குறிப்பிட்டுள்ளதற்கு ஆதரவாக ஆவணங்களான மருத்துவ சான்றுகள் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் மனுதாரரின் மகன் தான் இந்த வழக்கில் மனுதாரருக்கு பதிலாக ஆஜராகவேண்டி அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆகவே இந்த வழக்கை பற்றிய சங்கதிகள் மனுதாரரின் மகனான பொது அதிகார முகவர் அறிந்திருக்க வாய்ப்பு உள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலன் கருதி இந்த மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

1. இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை

என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 31–ம் நாள் ஆகஸ்ட் மாதம் 2023 ம் வருடம் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

A SARANYA

Digitally signed by A SARANYA
Date: 2023.08.31 11:49:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
குமாரபாளையம்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

இல்லை

A SARANYA Digitally signed by A SARANYA Date: 2023.08.31 11:49:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
குமாரபாளையம்

Fair/Draft/Order
IA.No.3/2023 in
OS.7/2020
Dated: 31.08.2023